





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழக மாற்றுத்திறனாளிகள் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ரெ.தங்கம் மற்றும் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் டி.எம்.என். தீபக் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உள்ளனர்.

அமைச்சர்கள் கே.என்.நேரு - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

# மயிலாடுதுறை மாவட்டக் கழக பாக நிலை முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் அறிக்கை!



மயிலாடுதுறை. ஜுன்.26

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. பாக நிலை முகவர்கள்2 ( பி.எல்.ஏ.-2) ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர்கள் கழக முதன்மை செயலாளர் கே.என்.நேரு, சிவ. வீ.மெய்யநாதன் பங்கேற்கிறார்கள்.

இதுகுறித்து மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு வருமாறு:

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. பாக நிலை முகவர்கள்2 ( பி. எல்.ஏ.-2) ஆலோசனை கூட்டம் நாளை (27.6.2025 -வெள்ளிக் கிழமை) மாலை 4.00 மணிக்கு மயிலாடுதுறையில் சிக்னேச்சர் திருமண மஹாலில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர். கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளாகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் பி.எல்.ஏ.2. வை சேர்ந்தவர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன். மேலும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளக்ள் தங்கள் பகுதியில் உள்ள அனைத்து பாக நிலை முகவர்கள்2 (பி.எல்.ஏ.2) கலந்து கொள்ள ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

பொருள்,

1. ஓரணியில் தமிழ் நாடு கழக உறுப்பினர் சேர்த்தல்.

2. வரும் 2026 சட்டமன்ற தேர்தல் ,

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.

---

தமிழ் உள்ளிட்ட பிற செம்மொழிகளை புறக்கணித்து

# சமஸ்கிருதத்திற்கு மிதமிஞ்சிய நிதி ஒதுக்கீடு செய்வதா?

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா கண்டனம்!



சென்னை, ஜுன் 26-

ஒன்றிய அரசு சமஸ்கிருதத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2014-15 முதல் 2024-25 வரையிலான பத்து ஆண்டுகளில் ஒன்றிய அரசு சமஸ்கிருத மொழியைப் பரப்ப ரூ.2532.59 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஒரியா ஆகிய ஐந்து செம்மொழிகளுக்குச் சேர்த்து ஒதுக்கப்பட்ட ரூ.147.56 கோடியை விட 17 மடங்கு அதிகமாகும் என்று தகவல் அறியும் உரிமை (RTI) மூலம் பெற்ற தகவலை ஆங்கில நாளிதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

ஆண்டுக்குச் சராசரியாகச் சமஸ்கிருதத்திற்கு ரூ.230.24 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் மற்ற ஐந்து செம்மொழிகளுக்குச் சராசரி ஆண்டு நிதி ரூ.13.41 கோடி மட்டுமே ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒதுக்கி தனது வெறுப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளது. இந்த பாரபட்சமான போக்கை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

2004ல் முதன் முதலாகச் செம்மொழி அங்கீகாரம் பெற்ற தமிழுக்கு, மொத்தம் ரூ.113.48 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. - இது சமஸ்கிருதம் பெற்ற தொகையைவிட 22 மடங்கு குறைவு.

இந்தியாவின் மக்கட்தொகையில் 22% மக்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஒரியா மொழி பேசுகிறார்கள். ஆனால் சமஸ்கிருதம் பேசுபவர்கள் மிகவும் சொற்பமானவர்களே.

சமீபத்தில் மதுரையில் ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா இந்தியாவின் தலைசிறந்த மொழி தமிழ் என்று பேசியது வெறும் பசப்பு வார்த்தைகள் மட்டுமே என்பதை இந்த புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்துகின்றன.

தமிழ் மற்றும் பிற செம்மொழிகளுக்கு மொழிகளுக்கான உரிய அங்கீகாரம், நிதி மற்றும் வளர்ச்சித் திட்டங்களை ஒன்றிய அரசு உடனடியாக வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.


இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சொ. துரைசண்முகம்

### ஜுன் 26 (2014)






இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழக உறுப்பினரானார்.

அப்போதைய செங்கல்பட்டு மாவட்ட பிரதிநிதியாகவும், திருவான்மியூர் வட்டக் கழகப் பொறுப்பாளராகவும், கழக நிர்வாகத்தில் திருவான்மியூர் சென்னை மாநகர் மாவட்டத்திற்கு வந்தபோது பொதுக்குழு உறுப்பினராகவும், வேளச்சேரி பகுதிக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கோவை தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :-

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 26.06.2025 | கிணத்துக்கடவு தெற்கு ஒன்றியம் | தாமரைக்குளம் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி எஸ்.இம்ரான் கான் |
| 2 | | கிணத்துக்கடவு மத்திய ஒன்றியம் | வடசித்தூர் | வழக்கறிஞர் ஆர்.தென்னை சிவா எஸ்.இம்ரான் கான் |
| 3 | | கிணத்துக்கடவு வடக்கு ஒன்றியம் | பனப்பட்டி | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி எஸ்.இம்ரான் கான் |
| 4 | 27.06.2025 | பொள்ளாச்சி வடக்கு நகரம் | புதிய பேருந்து நிலையம் | உடுமலை தண்டபாணி ச.பூங்கொடி |
| 5 | | பொள்ளாச்சி (வ) தெற்கு ஒன்றியம் | நடுப்புணி ஜங்சன் | உடுமலை தண்டபாணி ச.பூங்கொடி |
| 6 | | ஆனைமலை வடக்கு ஒன்றியம் | அம்பராம்பாளையம் | ஆம்பூர் தர்மன் பி.கவிஸ்ரீ |
| 7 | | வேட்டைக்காரன்புதூர் பேரூர் | சேத்து மேடு | கோட்டூர் முருகன் பி.கவிஸ்ரீ |
| 8 | | ஒடையகுளம் பேரூர் | பேரூராட்சி அலுவலகம் | கி.அ.ராஜன் பி.கவிஸ்ரீ |
| 9 | 28.06.2025 | கோட்டூர் பேரூர் | குமரன் கட்டம் | சிங்கை சௌந்தர்ராஜன் பி.கவிஸ்ரீ |
| 10 | | ஆனைமலை கிழக்கு ஒன்றியம் | [illegible] | சிங்கை சௌந்தர்ராஜன் பி.கவிஸ்ரீ |
| 11 | | ஆனைமலை பேரூர் | நெல்லுக்குத்திப்பாறை | ஆரணி மாலா பி.கவிஸ்ரீ |
| 12 | | ஒத்தக்கால்மண்டபம் பேரூர் | திருவள்ளுவர் அரங்கம், மில் கேட். | ஆரணி மாலா எஸ்.இம்ரான் கான் |
| 13 | | செட்டிபாளையம் பேரூர் | ஆட்டோ ஸ்டாண்ட் அருகில், செட்டிபாளையம். | குரும்பை கனகராஜ் எஸ்.இம்ரான் கான் |
| 14 | | மதுக்கரை ஒன்றியம் | சீராபாளையம் | கோவை சம்பத் எஸ்.இம்ரான் கான் |
| 15 | 29.06.2025 | வால்பாறை நகரம் | அண்ணா சிலை | பெரம்பூர் விஜயரத்தினம் ச.பூங்கொடி |
| 16 | | மதுக்கரை நகரம் | குரும்பபாளையம் | கோவை துரைமுருகன் ஏ.ஆட்லின் |
| 17 | | எட்டிமடை பேரூர் | பாவேந்தர் திடல், பேருந்து நிறுத்தம் அருகில். | பசுமை நிழல் விஜயகுமார் ஏ.ஆட்லின் |
| 18 | | திருமலையாம்பாளையம் பேரூர் | பட்டத்தரசி அம்மன் கோயில் தெரு, மாச்சி கவுண்டன்பதி. | கோவை துரைமுருகன் ஏ.ஆட்லின் |
| 19 | 30.06.2026 | சுல்தான்பேட்டை கிழக்கு ஒன்றியம் | அய்யம்பாளையம் | அதிரடி அல்தாப் செ.மதுமிதா |
| 20 | | சுல்தான்பேட்டை மேற்கு ஒன்றியம் | கள்ளப்பாளையம் | அதிரடி அல்தாப் செ.மதுமிதா |
| 21 | | சூலூர் தெற்கு ஒன்றியம் | பீடம்பள்ளி | திருப்பூர் சல்மான் செ.மதுமிதா |

கோவை
நாள் : 24.06.2025

கலைஞர் 100 1924 - 2023

